# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 149 — 1975 ජනවාරි 31 වැනි සිකුරාදා — 1975.01.31

149 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு சனவரி மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் .. .. .. | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. .. | 45 |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் | |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதிச்சேவைகள் ஆலோசனை சபையின நியமனங்களும் பிறவும் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 45 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 47 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 50 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| "மதுவரிச்சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


### சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*1975 இன் இல. 48*

இல. டி. 17/ஆர்.ஈ.சி.சி.

***தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமமாம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற நியமனம் துறத்தலும், நியமனமும்***

நியமனம் துறத்தல்

கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர், தரைப்படைச் சட்டம் (அத்தியாயம் 357) பிரிவு 13(1) இன் கீழ், 1974, ஏப்பிறில் 01 ஆம் தேதி தொடக்கம் ஆட்சேர் அலுவலர் நியமனத்தைத் துறந்துள்ளார் :—

கப்ரின் ஜி. அங்கம்மன, ஜி. டபிள்யு

நியமனம்

கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர், தரைப்படைச் சட்டம் (அத்தியாயம் 357) பிரிவு 13(1) இன்கீழ், 1974, ஏப்பிறில் 01 ஆம் தேதி தொடக்கம் ஆட்சேர் அலுவலராக :—

கப்ரின் எஸ். டி. பீரிஸ், ஜீ. டபிள்யு.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,
வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
*1975, சனவரி 17 ஆம் தேதி.*

1—939—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

### மற்றைய நியமனங்களும் பிறவும்

1975 இன் இல. 49

| | |
|---|---|
| பா4/1/25/93/72 (வா) | பா4/1/138/74 (வா) |
| பா4/1/37/144/73 (வா) | பா4/1/4/75 |
| பா4/1/24/74 (வா) | பா4/1/23/75 (வா) |
| பா4/1/44/74 (வா) | பா4/1/115/75 |
| பா4/1/91/75 | பா4/2/1 |
| பா4/1/134/74 (வா) | பா4/2/15 |

1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 37 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, நீதி அமைச்சர்; பீலிக்ஸ் றெஜினேல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய யான்,

1. செயிட் முகம்மது மௌலானா செயிட் அகமது மௌலானா அவர்களை கல்முனை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
2. திருமதி. ஜீ. கே. அமராவதி அவர்களை இரத்தினபுரி நீதி நிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானாகவும்;
3. நவரத்ன ரதாகே சைமன் அவர்களை இரத்தினபுரி நீதி நிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானாகவும்;
4. டபிள்யூ. றொபோ சிஞ்ஞோ அவர்களை அவிசாவளை நீதி நிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானாகவும்;

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆடு சனவரி மீ 01 ந் உ.

5. டீ. டீ. ஹேமபால அவர்களை அவிசாவளை நீதி நிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
6. ஆர். ஏ. சேனுரத்ன அவர்களை அவிசாவளை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
7. முகம்மது முஹம்தார் அவர்களை தெல்தெனிய நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
8. குருப்பு ஆரச்சில்லாகேகு சல்ஹாமி அவர்களை அம்பாறை நீதி நிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
9. இப்ருஹிம் முகம்மது சஹீட் அவர்களை மாவனல்ல நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
10. ஹேரத் முதியஞ்சேலாகே அமரசேகர பண்டார அவர்களை அவிசாவளை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதி வானுகவும்,
11. பீ. ஜீ. அல்பட் அவர்களை கொழும்பு நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
12. நோரிஸ் கோரளகே அவர்களை ஹோமாகம நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
13. புலத்சிங்களகே எட்மன் பெரேரா அவர்களை ஹோமாகம நீதி நிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்
14. கமமதகே டொன் அபயசிறி கருணரத்ன அவர்களை அனுராதபுர நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
15. குணதாச அமரசேகர அவர்களை நீதி அமைச்சின் பதில் அலுவலக உதவியாளராகப் பதவி வகிக்கும் காலத்துள் தீவின் எல்லா நீதிநிருவாகப் பகுதிகளுக்குமான ஒரு சமாதான நீதிவானுகவும்,
16. கே. மாதம்பகே அவர்களை காலி மாவட்டத்திலுள்ள ரத்கமப் பகுதிக்கான (பிட்டிவல்ல, கந்தளை, கதுறுப்பே, பூஸ்ஸ, றூபிவல, கல்கெமினுவ, மஹஹாகொட, ரத்கம, ஹாகொட, கம்மத்தேகொட, கட்டுதம்பெ, இப்புலமாவடவில, கருவெ கொட ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் காலி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானு கவும்,

இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1975 ம் ஞூ சனவரி ம்ீ 23 ந் உ.

1–942/1—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

1975 இன் இல 50

1973 ம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 68 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தினுல் நீதி அமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய யான்,

பா 4/ஹமப/7/27.

1. கே. மாதம்பகே அவர்களை, காலி மாவட்டத்திலுள்ள ரத்கமப் பகுதிக்கான (பிட்டிவல்ல, கந்தளை, கதுறுப்பே, பூஸ்ஸ, றூபிவல, கல்கெமினுவ, மஹ ஹாகொட, ரத்கம ஹொகொட கம்மத்தேகொட, கட்டுதம்பே, இம்புலமாவடவல, கருவெ கொட, ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) ஒரு மரண விசாரணை அதிகாரியாக,

இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

கொழும்பு 12,
1975 ம் ஞூ சனவரி ம்ீ 23 ந் உ.

1–942/ —31. 1.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 68, ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தினுல் நீதி அமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான்,

பா 4/ஹமப 1/22.

1. ஆர். எம். பீ. ராஜபக்ஷ அவர்களை புத்தளம் மாவட்டத்திலுள்ள வடக்கு ஒத்தர பலாத்தைக்கான மரணவிசாரணை அதிகாரியாக வகித்த நியமனத்தையும்,

2. டபிள்யூ. கே. எல். பீ. நந்ததாச அவர்களை காலி மாவட்டத்தி லுள்ள காலி நகரசபை எல்லைக்கான மேலதிக மரண விசாரணை அதிகாரியாக வகித்த நியமனத்தையும்,

இத்தால் உடன்டியாக நீக்குகின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1975 ம் ஞூ சனவரி ம்ீ 23 ந் உ.

1–942/3—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

*1975 இன் இல. 51*

*எண் : ஈ/பி 14/1/46 (11)*

*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரானவர் பின்வரும் நியமனத்தைக் கட்டளையிட்டுள்ளார் ;*

*1 ஆம் தரம் பொலிசுக் கண்காணிப்பாளர், திரு. ஜி. ஜயசிங்ஹ அவர்கள், 1974, ஓகத்து 27 ஆம் திகதி முதல் ஒரு பிரதிப் பொலி சுப் பரிசோதகர் தலைமையதிபதியாகப் பதிற் கடமையாற்றக் கடவர்.*

*வி. ரி. ஜயசிங்க,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

கொழும்பு,
*1975, சனவரி 16 ஆம் திகதி.*

*1-850—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149*

---

*1975 இன் இல. 52*

*இல. டி.251/ஆர்.ஈ.சி.ரி/2(1)*

***இலங்கை கடற்படை—அலுவலர்களின் நியமனங்கள் உறுதிப் படுத்தல்***

*1973, நவெம்பர் 01 ஆம் தேதி தொடக்கம் லெஃப்ரினன்ற் ஆக :—*

*பதில் லெஃப்ரினன்ற் ரி. எம். சற். ஹஸென், எஸ்.எல்.என்.*

*வி. ரி. ஜயசிங்ஹ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்*
*அமைச்சு.*

கொழும்பு.
*1975, சனவரி 17 ஆம் தேதி.*

*1-926/3—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149*

---

*1975 இன் இல. 53*

*இல. டி. 252/ஆர்.ஈ.சி. ரி/2*

***இலங்கை வான்படை—பதவியேற்றம்***

*1974, யூலை 11 ஆம் தேதி தொடக்கம் ஃபிளைற் லெஃப்ரினன்ற் ஆக :—*

*ஃபிளைங் ஒபிசர் நிஹால் பந்துல ரென்னக்கூன் (01157)—*
*தொழினுட்ப/பொறியியல்.*

*வி. ரி. ஜயசிங்ஹ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்*
*அமைச்சு.*

கொழும்பு,
*1975, சனவரி 17 ஆம் தேதி.*

1–926/1—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

1975 இன் இல. 54

இல. டி.252/ஆர்.ஈ.ஸி.ரி/2

**இலங்கை வான்படை—பதவியேற்றம்**

1974, திசெம்பர் 06 ஆம் தேதி தொடக்கம் ஃபிளைற் லெஃவ்ரினன்ற் ஆக :—

ஃபிளைங் ஒபிசர் தாஉவிட் மொகமெட் காலிட் (01165) நிருவாக/அணி.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975, சனவரி 17 ஆம் தேதி.

1-926/2—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம்**

28அ பிரிவின் கீழான அறிவித்தல்

1974 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிதிச்சட்டத்தினுல் (திருத்துதல்) திருத்தப்பட்டவாறுன 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 28அ பிரிவினுல் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் தத்துவத்தின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சர், லெஸ்லி சீசமன் குணவர்த்தனு ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் 1975 மார்ச் 15 ஆம் தேதியை, இதற்கு முன்னர், மோட்டார் வாகனத்தின் 1975 ஆம் ஆண்டு வரி அனுமதிப்பத்திரத்திற்கான (விற்பனையாளர் அனுமதிப்பத்திரம் அல்லது வருகையாளரது தற்காலிக அனுமதிப்பத்திரம் தவிர்ந்த) ஒவ்வோர் விண்ணப்பமும் செய்ய வேண்டிய தேதியாக நியமிக்கின்றேன்.

லெஸ்லி குணவர்த்தனு,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1975.01.15 ஆந் தேதி.

1-881/2—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

**1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டம்**

49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டத்தின் 49 ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி, வீடமைப்பு நிர்மாண அமைச்சர் பீற்றர் ஜெரல்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய யான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாகக் கீழ்க்காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினுற் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சர்.

ஜீஏபி/ஏசிகியூ/151
கொழும்பு,
1975.01.10.

அட்டவணை

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பெ. இ. உ. பிரிவு, திம்பிரிகசாய கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள 500 ம் வரிமதிப்பு இல. திம்பிரிகசாய ரேட்டைக் கொண்டுள்ள அம்பகஹாவத்தை என்றழைக்கப்படுகின்ற காணிக்குள்ளே கிட்டத்தட்ட 2¾ ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு காணித்துண்டு, அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு :—அதே காணியின் பகுதி ;
கிழக்கு :—436/3 ம், 440 ம், 442 ம், 442/1 ம், 442/2 ம், 450 ம் வரிமதிப்பு எண்களும், எல்விற்றிகல மாவத்தையும் ;
தெற்கு :—அதே காணியின் பகுதி ;
மேற்கு :—அதே காணியின் பகுதி.

1-927—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

**1954 ம் ஆண்டின் 19 ம் இலக்க கடை, அலுவலக ஊழியர் (வேலை, வேதனம் ஒழுங்குபடுத்துகை) அதிகாரச் சட்டம்)**

1954 ம் ஆண்டின் 19 ம் இலக்க, அதிகாரச் சட்டமான கடை, அலுவலக ஊழியர் (வேலை, வேதனம் ஒழுங்குபடுத்துகை) அதிகாரச்சட்டத்தின் 46 (3) ம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரினுல் செய்யப்பட்டு, 1972.12.22 ந் தேதி வெளியாகிய இலங்கைச் செய்தி மடலிற் பிரசுரமான அறிவித்தலானது, அவ்வறிவித்தலுக்கான அட்டவணையில், “நிகழ்ச்சி உதவியாளர்” என்பதற்குப் பதில் “நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்” என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மாற்றப்படுகிறது.

ஏ. ஈ. கோகளி மொறகொட,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ந் தேதி.

1-853/1—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

**கூலி நிருணயசபைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 136)**

(2 ம் அத்தியாயமாகிய) பொருள் கோடற் கட்டளைச் சட்டத்தோடு சேர்த்து வாசிக்கப்படும் (136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணயசபைக் கட்டளைச் சட்டத்தின் 52 ம் பிரிவின்கீழ், தொழில் அமைச்சரினுல் செய்யப்பட்டு, 1972.12.22 ம் தேதி வெளியாகிய 39 ம் இலக்க இலங்கைச் செய்தி மடலிற் பிரசுரமாகிய அறிவித்தலானது, அவ்வறிவித்தலுக்கான அட்டவணையில், “நிகழ்ச்சி உதவியாளர்” என்ற சொற்களுக்குப் பதிலாக, “நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்” என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மாற்றப்படுகிறது.

ஏ. ஈ. கோகளி மொறகொட,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ந் தேதி.

1-853/2—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

**1974 ஆம் ஆண்டின் 34 ஆம் இல. வீட்டாதன உச்சவரம்பு (திருத்தச்) சட்டத்தினற் திருத்தப்பட்டவாறுன 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இல. வீட்டாதன உச்ச வரம்புச்சட்டம் 17 அ பிரிவின் 2 ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை**

1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இல. வீட்டாதன உச்சவரம்புச் சட்டத்தின் II ஆம் பிரிவின் இங்கே கீழ் இணைக்கப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீடு எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ளபடியாலும், அந்த வீடு எனக்கு உரித்தாக்கப்பட முன்னர் அதன் சொந்தக்காரர், டாக்டர் மஹாப்பிட்டியகே வேலின் பீற்றர் பீரிஸ் அவர்களால் உடனடியாகச் சொல்லப்பட்ட வீட்டை உடைமை நீக்குவதற்கு எனக்கு விண்ணப்பஞ் செய்ததன் பேரில் தேசிய வீடமைப்பு ஆணையாளர் மாலவன விதானலாகே டொன் சிரில் கருணசேகரா ஆகிய நான் அத்தகைய உடைமை நீக்குதலுக்குப் போதியளவு ஆதாரங்கள் இருக்கின்றன என்று திருப்தியடைந்ததுடன் அரசாங்க வர்த்தமானியில் இக்கட்டளை பிரசுரிக்கப்பட்டு பன்னிரண்டு மாத காலத்துக்குள்ளே அதனை வேறு யாருக்கும் மாற்றுவதற்கு அந்த வீட்டுச் சொந்தக்காரரை இயலச்செய்யுமாறு வீடமைப்பு நிர்மாண அமைச்சரின் அங்கோரத்தோடு சொல்லப்பட்ட வீட்டின் சொத்தாண்மையை இத்தால் உடைமை நீக்குகின்றேன்.

எம். டீ. சீ. கருணசேகரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

1975, ஜனவரி.

அட்டவணை

1. கொழும்பு 7, ரேஸ் கோஸ் மாவத்தையிலுள்ள 9½ ம் வரி மதிப்பு இல. கொண்ட வீடு.

1–940—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

**1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**
16இஇ பிரிவின் கீழான பிரகடனம் பற்றிய அறிவித்தல்

1972 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்த)ச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 16இஇ பிரிவின்படி, தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதியமைச்சர், இவ்வறிவித்தலுக்கான, அட்டவணையின் பத்தி II இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியால் நடாத்தப்படுவதும் அட்டவணையின் பத்தி I இன் கீழ் நேர்வுத்த பதிவில் குறிப்பிடப் பட்டுள்ளதுமான ஒவ்வொரு பொறுப்பு முயற்சியும், அப்பிரிவின் நோக்கங்களுக்காக, அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியாக பிரகடனப்படுத்தியுள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சீ. ஏ. குரே,
செயலாளர்,
நிதி அமைச்சு.

கொழும்பு,
15 ஜனவரி 1975.

அட்டவணை

| பத்தி I | பத்தி II |
|---|---|
| இரத்தினக் கற்களை ஏற்றுமதி செய்யும் அல்லது விற்பனை செய்யும் பொறுப்பு முயற்சி | என். வைத்திலிங்கம் (எக்ஸ்போட்ஸ்) லிமிட்டெட். |
| இரத்தினக் கற்களை ஏற்றுமதி செய்யும் அல்லது விற்பனை செய்யும் பொறுப்பு முயற்சி | சிங்ககிரி ஜெம் எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். |
| இரத்தினக் கற்களை ஏற்றுமதி செய்யும் அல்லது விற்பனை செய்யும் பொறுப்பு முயற்சி | பிர்கோ இன்டர்னஷனல் ஜெம் எக்ஸ்போ லிமிட்டெட். |

1–878—31.01.75 ந் தி திய வர்த்தமானி இல. 149

---

**இணக்கச் சபைகள் சட்டம்**

கட்டளை

இலங்கை அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின்கீழ் 1974 யூலை மாதம் 12 ஆம் தேதிய 120 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 2 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இரத்தினபுரி மாநகரசபையின் 1, 2, 3, 4, 5, 6, 7 ஆகிய வட்டாரங்களை உள்ளடக்கிய பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.

1. இரத்தினபுரி, பொத்குல்விகாரை மாவத்தையைச் சேர்ந்த மானவடுகே சாள்ஸ் குணவர்த்தன அவர்கள்.
2. இரத்தினபுரி, மூவகமவைச் சேர்ந்த கடபொடீ கங்கான மலாகே தர்மசேன அவர்கள்.
3. இரத்தினபுரி, முத்துவவைச் சேர்ந்த ராஜா தர்மதாச அவர்கள்.
4. இரத்தினபுரி, கங்கபடபாரவைச் சேர்ந்த பிராக்மன சுமணசிங்க ராமச்சந்திரா அவர்கள்.
5. இரத்தினபுரி, சமகிபுர, டபிள்யூ. 15 ஐச் சேர்ந்த ரத்தினசிறி வலிகெபோல அவர்கள்.
6. இரத்தினபுரி, கட்டன்கம ரத்னமஹ கல்லூரியைச் சேர்ந்த வைமன் பீரிஸ் அவர்கள்.
7. இரத்தினபுரி, கெலின் வீதியைச் சேர்ந்த நாணயக்கார வசம் அப்புகே வில்பட் த சில்வா அவர்கள்.
8. இரத்தினபுரி, பல்லிய வீதி, 43/6 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சோமபால கந்தவின்ன அவர்கள்.
9. இரத்தினபுரி, நம்பபான வீதி, "ரணசெவன" ஐச் சேர்ந்த சந்திரபால ரணசிங்க அவர்கள்.
10. இரத்தினபுரி, அ/சீவலி மத்திய மகா கல்லூரியைச் சேர்ந்த பிரேமா ருசிகம அவர்கள்.
11. இரத்தினபுரி, ஜரைஞ்சன ஹோட்டலைச் சேர்ந்த மஹ கொடகே ஆத்தர் அவர்கள்.
12. இரத்தினபுரி, மூவகமவைச் சேர்ந்த விதானகே பிரேம சந்திரா பெரேரா அவர்கள்.
13. இரத்தினபுரி, குட்ஷெட் வீதி, 3/36 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அம்பகஹகோரளகே பியரதன அவர்கள்.
14. இரத்தினபுரி, கொழும்பு வீதி, 70 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த நிமல் ஜயகொடி அவர்கள்.
15. இரத்தினபுரி, அங்கம்மன வீதியைச் சேர்ந்த ஹங்குல் விட்டிய பொடிமகத்தயா அவர்கள்.

(ஆ) இரத்தினபுரி, பொக்குல்விகாரை, மாவத்தையைச் சேர்ந்த மானவடுகே சாள்ஸ் குணவர்த்தன அவர்களை மேற்குறித்த குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1975, சனவரி 09 ஆம் நாள்.

1-926/1—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

### இணக்கச் சபைகள் சட்டம்

#### கட்டளை

இலங்கை அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக் குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின்கீழ் 1974 யூலை மாதம் 12 ஆம் தேதிய 120 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 2 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இரத்தினபுரி மாநகரசபையின் 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகிய வட்டாரங்களை உள்ளடக்கிய பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.

1. இரத்தினபுரி, திரிவானகட்டிய, 142 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த விந்தமுலகே வில்பிறட் சில்வா அவர்கள்.
2. இரத்தினபுரி, அங்கம்மனவைச் சேர்ந்த உக்குவலாகே சிமியோன் அவர்கள்.
3. இரத்தினபுரி, அங்கம்மன வீதியைச் சேர்ந்த மாவனன ஹேவகே குணபால அவர்கள்.
4. இரத்தினபுரி, மல்வல, தேசிய வீடமைப்பு, இல. 26 ஐச் சேர்ந்த கோம்பல விதானகே ஞானசேன அவர்கள்
5. இரத்தினபுரி, பிட்டரவும் வீதியைச் சேர்ந்த மல்வத்த மன்னலாகே சயிமன் சரல சாந்த அவர்கள்.
6. இரத்தினபுரி, பிட்டரவும் வீதி, இல. 11/11 ஐச் சேர்ந்த ஹில்மன் ஹபரகமுவ அவர்கள்.
7. இரத்தினபுரி, பொல்ஹென்கொடை, இல. 38/48 ஐச் சேர்ந்த சூரசேன எபேதொட அவர்கள்.
8. இரத்தினபுரி, பொல்ஹென்கொடை, இல. 49/33 ஐச் சேர்ந்த வில்பிட்டியகே சயிமன் அவர்கள்.
9. இரத்தினபுரி, பட்டுகெதற பழைய வீதி, இல. 34 ஐச் சேர்ந்த பட்டுகெதறகே ஹீன்மகத்மயா அவர்கள்.
10. இரத்தினபுரி, வரளுப, பத்தனகெதறவைச் சேர்ந்த நிஹால் ஜயரத்ன அவர்கள்.
11. இரத்தினபுரி, கொடிகமுவ, "சிந்தன" வைச் சேர்ந்த காலுகாகம லேகம்கே லயனல் அவர்கள்.
12. இரத்தினபுரி, திரிவானகட்டியவைச் சேர்ந்த சிரிபால ஜயசிங்க அவர்கள்.
13. ஹிதல்லன, ஜனபதயவைச் சேர்ந்த மொகமெட் நல்பிக் அவர்கள்.
14. ஹிதல்லன, 113 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஹேனக ஆரச்சிலாகே ஆரியரத்ன அவர்கள்.
15. இரத்தினபுரி, பழைய வீதி, பட்டுகெதறயைச் சேர்ந்த குடாவிதானலாகே சயிமன் அப்பு அவர்கள்.
16. இரத்தினபுரி, கொஸ்பலவின்னவைச் சேர்ந்த ரணவீர ஆரச்சிகே குணரத்ன அவர்கள்.
17. இரத்தினபுரி, கொஸ்பலவின்னவைச் சேர்ந்த பர்சி குருநாத அவர்கள்.
18. இரத்தினபுரி, மல்வல வீதியைச் சேர்ந்த பசி மகதுறகே சிறில் அவர்கள்.

(ஆ) இரத்தினபுரி, திரிவானகட்டிய, 142 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த விந்தமுலகே வில்பிறட் சில்வா அவர்களை மேற்கூறிய குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று வருடங்களாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1975, சனவரி 09 ஆம் நாள்.

1-926/2—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

### இணக்கச் சபைகள் சட்டம்

இலங்கை அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக் குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், அப்பிரிவின் கீழ் 1974 செற்றெம்பர் 20 ஆம் தேதிய 130 ஆம் இலக்கக் கசெற்றில் காலி மாவட்டத்திலுள்ள ஹிக்கடுவ நகராட்சி மன்றப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழு சம்பந்தமாக வெளியிடப்பட்ட கட்டளையில் (அ) (1) இல் குறிப்பிடப்பட்ட "ஹிக்கடுவ, வல்லவத்த 115 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அளுத்வல தந்திரிகே ஜினதாச அவர்கள்" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஹிக்கடுவ, வல்லவத்த 115 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அளுத்வல தந்திரிகே பியதாச அவர்கள்" எனும் சொற்களைப் பதனீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்துகின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1975, சனவரி 09 ஆம் நாள்.

1-926/3—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

பி என். 1992.

எல். டி.—பி 97/41.

### ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்கள்

1948 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்கள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1934 ஆம் ஆண்டின் பெப்புரவரி மாதம் 05 ஆந் தேதிய ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின் 51 ஆம் பிரிவின் கீழான அறிவிப்பு.

பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
31.12.1974.

#### அறிவிப்பு

காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1934 ஆம் ஆண்டின் பெப்புரவரி 05 ஆந் தேதிய ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்கள், 25 இ என்னும் பிரிவில், அதிலுள்ள (1) ஆம் உட்பிரிவில் "நோய் அல்லது வயது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நோய், வயது அல்லது பதவி ஒழிப்பு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

2. இவ்வறிவிப்பின் 1 ஆம் பந்தியால் ஓய்வூதியம் பற்றிய குறிப்புக்களிற் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்கும் 1973 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 01 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

1-679—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

### காணி அபிவிருத்திச் சட்டம் (320 ம் அத்தியாயம்)

காணி அபிவிருத்திச் சட்டத்தின் 6 (I), ம் பிரிவின் கீழ் விவசாய, காணி அமைச்சரால் கீழ்ப் பெயர் குறிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது கடமைகளுக்கு மேலதிகமாக தமது பெயர்கட்கு எதிரே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் குறிப்பிட்ட திகதிகள் தொடக்கம் காணி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் :—

டி. பி. றணதுங்க,
உதவி செயலாளர்,
விவசாய, காணிச் செயலாளருக்காக.

கொழும்பு, 1974 ந் ஆண்டு டிசம்பர் மீ 24 ந் உ.

| பெயர் | பதவி | மாவட்டம் | திகதி |
|---|---|---|---|
| திரு. ஜே. எச். எம். றணவீர | .. காரியாதிகாரி | கேகாலே | 1974.08.23 |
| திரு. ஜீ. பி. பட்டுவிற்றகே | .. காரியாதிகாரி | .. கேகாலே | .. 1974.08.23 |
| திருமதி ஆர். எஸ். டபிள்யு. ரத்னாயக்கா | .. பொ. உ. உ. | .. கேகாலே | .. 1974.08.23 |
| திரு. பி. எ. இ. பி. ஜயசூரிய | .. காரியாதிகாரி | .. அநுராதபுரம் | .. 1974.11.01 |
| திரு. எஸ். பி. ஜயதிலக | .. காரியாதிகாரி | .. அநுராதபுரம் | .. 1974.11.01 |
| திரு. ஏ. டபிள்யு. கே. பெரோரா | .. காரியாதிகாரி | .. காலி | .. 1973.10.02 |
| திரு. டபிள்யு. ஏ. பி. ஆர். குணரத்ன | .. காரியாதிகாரி ” | .. அநுராதபுரம் | .. 1974.11.01 |

1–889—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**உத்தரவாணைகள் வழங்குதலும் உத்தரவாணைகளைப் புதுப்பித்தலும்**

*வட்டுவாய்க்கால் மீன்பிடிப் பிரமாணங்கள்—1975/76*

*1957 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ந் தேதியின் 11,103 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரமான பிரமாணங்களின் 2 ம், 11 ம் பிரமாணங்கள் சார்பாக.*

*கூறப்பட்ட பிரமாணங்களின் 3 ம் பிரமாணத்தின் கீழ் தகைமையுடைய யாவரும் 1975 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ம் திகதிக்குப் பிந்தாமல், கடற்றொழில் பணிப்பாளர், கடற்றொழில் திணைக்களம், கொழும்பு 3 எனும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர். முல்லைத்தீவு, கள்ளப்பாடு, வட்டுவாய்க்கால் கிராம சேவையாளர்களிடமிருந்தும் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும். 1975 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ம் தேதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*ஏ. ஐ. முகைதீன்,*
*கடற்றொழில் பணிப்பாளர்.*

*கொழும்பு 3, 1975.01.24.*

*1–930—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149*

---

### மொணறாகலை மாவட்டத்தில் மொணறாகலை, கந்துகற கோறளை ஆகிய பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்களின் பிரிவில் கிராம சேவையாளர் தொகுதிகளை திருத்தி அமைத்தல்

1975 பெப்புருவரி மாதம் 03 ம் திகதி தொடக்கம் மொணறாகலை பரிபாலன மாவட்டத்தில் மொணறாகலை பெரும்பாக இறைஉரி உத்தியோகத்தர் பிரிவில் இலக்கம் 129, முப்பனே இலக்கம் 130 வட்டுகம்மன ஆகிய கிராமசேவர்கள் பகுதியும் கந்தகற கோறளை காரியாதிகாரி பிரிவில் இலக்கம் 131 யாக்குளுவ கிராம சேவையாளர் பகுதியும் முப்பனே வட்டுகம்மான, யாக்குளுவ, கும்புக்கன என நான்கு கிராம சேவகர்கள் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன என இதன்மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

(அ) கீழ்க் குறிக்கப்படும் கிராமங்கள் இலக்கம் 129 கொண்ட முப்பனே கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும் :—

| | |
|---|---|
| 1. முப்பனே நகரம் | 2. பின்னகொல்ல |
| 3. சிறிகல்ல (பகுதி) | 4. கொலங்கொல்ல |
| 5. மாகன்தனமுல்ல | 6. வண்டாரவாடிய |
| 7. பட்டியலன்த | 8. அலகொலவருற |
| 9. வக்கினிகொடே | 10. வெற்றன்கான |
| 11. வெலேவத்த | 12. விகாரமுல்ல |
| 13. வுட்டகொல்ல | 14. எண்டேறுலன்த |
| 15. கவ்டாவ | 16. குலந்தாவ இட்டுகசை |
| 17. குலந்தாவ வலதுக்ரை | 18. குலந்தாவ |
| 19. கிந்தி கிவுல | |

(ஆ) கீழ்க்குறிக்கப்படும் கிராமங்கள் இலக்கம் 130 கொண்ட வட்டுகம்மான கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும்.:—

| | | |
|---|---|---|
| 1. வட்டுகம்மன | 2. தெவத்தேகிவுல ||றீ | 3. வருலன்த |
| 4. மியனவத்த | 5. அல்ல | 6. வலியாய |
| 7. சிறிகலபகுதி | 8. நக்கல | 9. குக்குறுமான்கொட |
| 10. டங்வத்த | 11. கொலொன்கஸ்தன்ன | 12. குறுகெல |
| 13. நாறங்வான | 14. குறுந்துகொட | 15. மடுகொட்டேவத்த |
| 16. தெகிகிந்த | 17. றத்னபிட்டிய | 18. கொட்டிகல்கெல |

(இ) கீழ்க்குறிக்கப்படும் கிராமங்கள் இல. 131 கொண்ட யாகுளுவ கிராம சேவையாளர் பகுதியில் அடங்கும் :—

| | |
|---|---|
| 1. யாகுளுவ | 5. அல்வத்த |
| 2. புள்ளல்லாவ | 6. உடகங்கொட |
| 3. மடுகொட்டன்அருவ | 7. கொட்ட நெலுவ |
| 4. கெலதுன்தல (பகுதி) | 8. தேறப் பகுவ |

(ஈ) கீழ்க்குறிக்கப்படும் கிராமங்கள் இல. 131எ கொண்ட கும்புக்கனே கிராமசேவையாளர் பகுதியில் அடங்கும் :—

1. தெகல் அறம்ப
2. கல்வல் ஆறகம
3. பாருவில
4. கும்புக்கனே
5. கொறம்புவ
6. மதுறுகட்டிய

2. இக்கிராம சேவகர் பிரிவுகட்டு உள்ளடங்கும் நீதவான் மன்றம்/மாவட்ட நீதிமன்றம் பொலிஸ் பகுதி, பிறப்பு இறப்புத் தொகுதி, உள்ளூராட்சிச் சபை, தேர்தற் தொகுதி ஆகியவை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக கீழே குறிக்கப்பட்டுள்ளது :—

| | பெ. இ. உ. பகுதி | கிராம சேவகர் பகுதி | மாவட்ட/நீதவான் மன்றம் | பொலிஸ் பகுதி | பிறப்பு இறப்பு பதிவுத் தொகுதி | உள்ளூராட்சிச் சபை | தேர்தற் தொகுதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மொனருகலே | முப்பனே | மொனருகலே | மொனருகலே | புத்தளே வதிறிட்ட | மொனருகலே நகரமன்றமும் மொனருகலே கிராமசபையும் | மொனருகலே |
| 2. | டிை | வட்டுகம்மான | டிை | டிை | டிை | மொனருகலே கிராமசபை | டிை |
| 3. | கந்துகறகோறளே | யாகுளுவ | டிை | மொனருகலேயும் பஸ்ஸறையும் | கந்துகற கோறளே | கந்துகற கோறளே கிராம சபையும் | டிை |
| 4. | மொனருகலே | கும்புக்கனே | டிை | மொனருகலே | கந்துகறவும் புத்தளே வதிறிட்டவும் | டிை மொனருகலே கிராம சபையும் | டிை |

மொனருகலே கச்சேரி,
1975 ந் ஆண்டு ஜனவரி மீ 13 ந் உ.

எஸ். ஜே. சுமனசேகர பண்டா,
மொனருகலே மாவட்ட அரசாங்க அதிபர்.

1–938—31.10.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

மாத்தளே மாவட்டம் ரத்தோட்டை உக்குவளே காரியாதிகாரி பிரிவிலுள்ள கிராம சேவகர் பிரிவுகளே மீளத் திருத்தியமைத்தல்.

1975 ம் ஆண்டு தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் மாத்தளே மாவட்டம் உக்குவளேக் காரியாதிகாரி பிரிவிலுள்ள இல. ஈ 363 கொண்ட உடங்கமுவ வசத்திலடங்கிய உடஹப்புவித்த என்னும் கிராமம் ஈ 367 இலக்கம் கொண்ட பல்லேகப்புவித வசத்தினுள் சேர்த்து அதை “கபுவித” எனப் பெயரிட்டுள்ளதைப் பொதுமக்களின் பார்வைக்காக இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

(அ) கீழ்க் காணப்படும் கிராமங்கள் இல. ஈ. 363 கொண்ட உடங்கமுவ கிராம சேவகர் பிரிவினுள் அடங்கும் :—

1. எல்கடுவ நகரம்
2. எல்கடுவ கிராமம்
3. எல்கடுவ தோட்டம்
4. உடங்கமுவ
5. லாலிஅம்ப
6. வேகல
7. ரத்வத்த (பகுதி)
8. மெரிக் தோட்டம்
9. கடுவெல குடியேற்றம்

(ஆ) கீழ்க் காணப்படும் கிராமங்கள் இல. ஈ 367 கொண்ட கபுவித கிராம சேவகர் பிரிவினுள் அடங்கும் :—

1. உடகபுவித
2. மகதண்ண தோட்டம்
3. குனுகல தோட்டம்
4. வட்டகொட தோட்டம்
5. கங்கரன்கந்த தோட்டம்
6. கல்கே தோட்டம்
7. பல்லேகபுவித கிராமம்
8. அல்வத்த
9. ரத்வத்த “பீ” குடியேற்றம்
10. ஸ்திரஸ்லா குடியேற்றம்
11. ஸ்திரஸ்லா தோட்டம்
12. தெகிஅத்தாமட

2. இக் கிராம சேவகர் பிரிவுகளினுள் அடங்கிய மாஜிஸ்ரேட் கோடு, கிராமக் கோடு, பொலிஸ் பிரிவு, பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் பிரிவு, உள்ளூராட்சி மன்றங்கள், தேர்தல் மாவட்டம் ஆகியன பொதுமக்களால் பார்வையிடுவதற்காகக் கீழே தரப்பட்டுள்ளன :—

| கிராம சேவகர் பிரிவு | மாஜிஸ்திரேட் கோடு | பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் பிரிவு | உள்ளூராட்சி மன்றம் | பொலிஸ் பிரிவு | தேர்தல் தொகுதி |
|---|---|---|---|---|---|
| ஈ 263 உடங்கமுவ | மாத்தளே | மாத்தளே உடசிய | மாத்தளே உடசியபத்து | மாத்தளே | ரத்தோட்ட |
| ஈ 367–கபுவித | மாத்தளே | மாத்தளே உடசிய | மாத்தளே உடசியபத்து வடக்கு | மாத்தளே | ரத்தோட்ட |

சிறில் கமகே,
அரசாங்க அதிபர்,
மாத்தளே மாவட்டம்.

மாத்தளேக் கச்சேரி,
1974 ம் ஆண்டு நவம்பர் மீ 25 ந் உ.

1–937—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

**மக்கள் வங்கி**

அ.பொ.எ.ச. கட்டடம்
இல, 90, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை
கொழும்பு 2

***1973 ஆம் ஆண்டின் 16 ஆம் இல. நிதி அரச ஈட்டு வங்கிச் (திருத்தச்) சட்டத்தாற் திருத்தப்பட்ட 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இல. நிதிச்சட்டம்***

*73 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

மக்கள் வங்கியின் இயக்குநர் சபைத் தலைவரான ஹெக்டர் அபய வர்த்தன ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நிதி அரச ஈட்டு வங்கிச் (திருத்தச்) சட்டத்தாற் திருத்தப்பட்ட 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு, இத்துடனுள்ள அட்டவணையிற் தரப்படும் உரிமையாக்கற் கட்டளையின் மூலம் மக்கள் வங்கியால் உரிமையாக்கப்பெற்ற இடங்கள் எதனிலேனும் எவருக்காவது உரிமையிருப்பின் சொல்லப்பட்ட 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின், கீழ் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நட்ட ஈட்டுத் தொகை முழுவதற்கும் அல்லது ஏதேனும் பகுதிக்குரிய உரிமைகளைக் கொழும்பு 2 இல் யூனியன் பிளேஸில், 167½ இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் காணி மீளற் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆந் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் விண்ணப்பிக்கும்படி இத்தால் அறிவிக்கின்றேன்.

உரிமை விண்ணப்பங்கள் இதற்கெனவுள்ள படிவங்களில், இரு பிரதிகளில், எழுதப்பட்டு மக்கள் வங்கி இயக்குநர் சபைத் தலைவர், அ.பொ.எ.ச. கட்டடம், இல. 90, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

எச். அபயவர்த்தன,
தலைவர்,
மக்கள் வங்கி இயக்குநர் சபை.

கொழும்பு, 15.01.1975.

அட்டவணை

1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 125/5 கொண்ட அதிவிசேட இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உரிமையாக்கற் கட்டளை இல. 32.

1-955—31.10.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளி யிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணை யில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1975

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி .. | .. வெள்ளி | 3.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 27.12.74 |
| | வெள்ளி | 10.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 3.1.75 |
| | வெள்ளி | 17.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 10.1.75 |
| | வெள்ளி | 24.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 17.1.75 |
| | வெள்ளி | 31.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 24.1.75 |
| பெப்புருவரி | .. வெள்ளி | 7.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 31.1.75 |
| | வெள்ளி | 14.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 7.2.75 |
| | வெள்ளி | 21.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 14.2.75 |
| | வெள்ளி | 28.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 21.2.75 |
| மாச்சு .. | .. வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 28.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 7.3.75 |
| | வெள்ளி | 21.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 14.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 21.3.75 |
| ஏப்பிறல் | .. வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 18.4.75 |
| மே | .. வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 23.5.75 |
| யூன் .. | .. வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 20.6.75 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு.*
*1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.,*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது